‘மாற்றுத் திறனாளிகள்’ குறித்து - பேச்சின் வேகத்தில் நேர்ந்த பிழை!

கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் வருத்தம்!

சென்னை, ஏப். 13 -

கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்களின் அறிக்கை வருமாறு: -

இயற்கையிலேயே உடலில் ஏற்பட்ட குறைபாடு உடையவர்களை அருவருக்கும் பெயர் கொண்டு, அவர்களை அழைத்து வந்ததை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கருணை உள்ளத்தோடு "மாற்றுத் திறனாளிகள்" என்று பெயரிட்டு அழைத்தார். அதையே நாங்களும் பின்பற்றி வருகிறோம்.

அப்படிப்பட்ட நானே, ஒரு பொதுக் கூட்டத்தில் பேச்சின் வேகத்தில் மாற்றுத் திறனாளிகளை பழைய பெயரையே கொண்டு உச்சரித்து விட்டேன் என்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் என் கவனத்திற்கு கொண்டு வந்தபோது, நான் அதிர்ச்சியும் - வருத்தமும் அடைந்தேன். கலைஞரால் வளர்க்கப்பட்ட நானே இப்படிப்பட்ட தவறைச் செய்தது மிகப் பெரிய தவறாகும். மாற்றுத்

திறனாளிகள் உள்ளம் புண்பட்டிருக்கும். அதற்காக என் நிபந்தனையற்ற வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தலைவர் தளபதி அவர்கள், எந்த அளவிற்கு வருந்தியிருப்பார் என்பது எனக்குத் தெரியும். அவருக்கும் என் வருத்தத்தை தெரிவித்து, இனி இத்தகைய நிகழ்வு நிகழாது என்று உறுதி அளிக்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் துரைமுருகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!

பிரதமர் மோடி எப்போது கவனத்தில் கொள்வார்?

ராகுல்காந்தி கேள்வி!

புதுடெல்லி, ஏப். 13 -

விளிம்புநிலை சமூக இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதில் பிரதமர் மோடி எப்போது கவனத்தை திருப்புவார் என மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல் காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் ராகுல்காந்தி பதிவிட்டுள்ளதாவது,

கடந்த 2024ல் பிரதமர் மோடி “வேலைவாய்ப்புடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை” திட்டத்தை மிகுந்த ஆரவாரத்துடன் அறிவித்ததாகவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க உறுதியளித்ததாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் திட்டத்தை அறிவித்து ஒரு ஆண்டு கடந்த நிலையில், பா.ஜ.க. அரசு எதையும் வரையறுக்கவில்லை என்றும், அந்த திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பத்தாயிரம் கோடி ரூபாய் நிதி திருப்பியளிக்கப்பட்டுள்ளதாக ராகுல்காந்தி புகார் கூறியுள்ளார்.

இந்த நிகழ்வு பிரதமர் மோடி வேலையின்மை குறித்து எவ்வளவு தீவிரமாக இருக்கிறார் என்பதை

காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். கோடிக் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான வழி, MSMEகளில் பெரிய அளவிலான முதலீடு, நியாயமான சந்தைகள் என்றும் ராகுல்காந்தி பதிவிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு மிகவும் தேவைப்படும் கோடிக் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான இந்த திட்டம் மற்றொரு பொய்யா என்றும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

அதானி உள்ளிட்ட கோடீஸ்வர நண்பர்களை வளப்படுத்துவதில் இருந்து விளிம்புநிலை சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதில் பிரதமர் மோடி எப்போது கவனத்தை திருப்புவார்?

இவ்வாறு ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

“உசிலம்பட்டியில் மூக்கையாத் தேவருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும்” என அறிவித்த

முதலமைச்சருக்கு - தேவர் மக்கள் இயக்கம் நன்றி!

நிறுவனர் – தலைவர் சங்கிலி பி.மாரிப்பாண்டியன் அறிக்கை!

சென்னை, ஏப். 13-

மூக்கையா தேவருக்கு மணிமண்டபம் அமைக்க உத்தரவு வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு "தேவர் மக்கள் இயக்கம்" சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என அவ்வியக்கத்தின் தலைவர் சங்கிலி பி. மாரிப்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

மூக்கையா தேவர் பள்ளிப் பருவத்திலேயே பொதுகாரியங்களில் ஈடுபட்டு நியாயத்திற்காக போராடியவர். சுதந்திரத் திற்குப் பிறகு பிறமலைக் கள்ளர் இனத்தின் பெருமைகளை வெளிக் கொணர்ந்து அவர்களுக்கு உரிய இடத்தைப் பெற பெருமுயற்சி மேற்கொண்டார். இந்த முயற்சி அவ்வின மக்களின் உயவுக்கு வழிவகுத்தது.

1952ம் ஆண்டு முதல் தொடர்ந்து 6 முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். கல்வித் தந்தை மூக்கையா தேவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் 3 கல்லூரிகளை உருவாக்கினார். மேலும், மதுரை கோரிப்பாளையம் பகுதியில் தேவர் சிலை அமைய முக்கிய காரணமாக இருந்தார்.

இராமநாதபுரம் எம்.பி. ஆக இருந்தபோது கச்சத்தீவிற்காக உரிமைக்குரல் எழுப்பினார். நீங்கா புகழ் பெற்ற மூக்கையா தேவருக்கு உசிலம்பட்டியில் மணிமண்டபம் அமைக்க உத்தரவு பிறப்பித்த தமிழக முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு "தேவர் மக்கள் இயக்கம்" சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்க முதலீட்டுப் பத்திரம்: முதல்வர் வழங்கினார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், “கடந்த 10 ஆண்டுகளாக திருக்கோயில்களில் காணிக்கையாக வரப்பெற்ற பலமாற்று பொன் இனங்களில், திருக்கோயிலுக்குத் தேவைப்படும் இனங்கள் நீங்கலாக, ஏனைய இனங்களை மும்பையிலுள்ள ஒன்றிய அரசுக்குச் சொந்தமான தங்க உருக்காலையில் உருக்கி, சொக்கத் தங்கமாக மாற்றி திருக்கோயிலுக்கு வருவாய் ஈட்டும் வகையில் வங்கிகளில் முதலீடு செய்து, அதிலிருந்து பெறப்படும் வட்டி மூலமாக திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளை கண்காணிப்பதற்கு 3 மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஓய்வுபெற்ற மாண்பமை நீதியரசர்கள் தலைமையிலான குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்படும்” என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாட்டை சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை என மூன்று மண்டலங்களாக பிரித்து ஓய்வு பெற்றமாண்பமை உச்சநீதிமன்றநீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர்கள் க.ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா ஆகியோர் தலைமையில் தனிக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

அதன்படி, இக்குழுவினரின் கண்காணிப்பில், இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோயில், பெரிய பாளையம் பவானியம்மன் திருக்கோயில், திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயில், மாங்காடு காமாட்சியம்மன் திருக்கோயில், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருச்செங்கோடு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோயில், சிவகங்கை சமஸ்தான தேவஸ்தானம், இராமநாதபுரம் ஆதிஜெகநாதபெருமாள் திருக்கோயில், இராமநாதபுரம், நாகநாதசுவாமி திருக்கோயில், மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில், சேலம் சுகவனேஸ்வரர் சுவாமி திருக்கோயில், தாயமங்கலம் முத்து மாரியம்மன் திருக்கோயில், குணசீலம் பிரசன்ன வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில், சேலம் கோட்டை மாரியம்மன் திருக்கோயில், காருவள்ளி பிரசன்ன வெங்கட் ரமணசுவாமி திருக்கோயில், சேலம், கோட்டை அழகிரிநாத சுவாமி திருக்கோயில், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில், நாமக்கல், நரசிம்மசுவாமி திருக்கோயில், சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில் ஆகிய 21 திருக்கோயில்களில் பக்தர்களால் காணிக்கையாக வழங்கப்பட்ட பலமாற்று பொன் இனங்களில் திருக்கோயிலுக்கு பயன்பாடற்ற பொன் இனங்களை உருக்கி கிடைக்கப்பெற்ற 1,074 கிலோ 123 கிராம் 488 மில்லி கிராம் சுத்தத் தங்கம் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் அந்தந்த திருக்கோயிலின் பெயரில்தங்கக்கட்டிகளாக முதலீடுசெய்யப் பட்டுள்ளன.

இதன்மூலம் ஆண்டொன்றிற்கு திருக்கோயில்களுக்கு 17 கோடியே 81 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வட்டித் தொகையாக கிடைக்கப் பெறுகிறது.

21 திருக்கோயில்களின் பெயரில் பாரத ஸ்டேட் வங்கியின் தங்க முதலீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்யப்பட்டுள்ளதற்கு அடையாளமாக திருச்சி மாவட்டம், சமயபுரம், மாரியம்மன் திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம், பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், கோவை மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களின் அறங்காவலர் குழு தலைவர்கள், இணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர் / செயல் அலுவலர் ஆகியோரிடம் அதற்கான பத்திரங்களை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று வழங்கினார்.

இத்திட்டத்தின் மூலம் திருக்கோயில்களில் பயன்பாட்டில் இல்லாத பலமாற்று பொன் இனங்களை உருக்கி திருக்கோயில்களுக்கு வருவாய் ஈட்டப் பட்டுள்ளதோடு, அதன்மூலம் கிடைக்கப்பெறும் வட்டித் தொகை அந்தந்த திருக்கோயிலின் மேம்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஓய்வு பெற்ற மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர் துரைசாமி ராஜு மற்றும் ஓய்வு பெற்ற மாண்பமை உயர்நீதி மன்ற நீதியரசர்கள் க.ரவிச்சந்திர பாபு, செல்வி ஆர்.மாலா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, பாரத ஸ்டேட் வங்கியின் பொது மேலாளர் ஜோபி ஜோஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தொண்டியில் – புதிய அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்படும்! கழக அரசில்

3400 பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன!

சட்டப்பேரவையில் – அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் தகவல் !

சென்னை, ஏப்.13-

சட்டப்பேரவையில், கேள்வி நேரத்தின்போது விளக்கமளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், “கடந்த நான்காண்டுகால ‘கழக அரசியல் 3400 பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன” என்று குறிப்பிட்டார்.

கேள்வி நேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

இராம.கரு மாணிக்கம்: (அ) திருவாடனை தொகுதி, தொண்டி பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? (ஆ) ஆம் எனில், எப்போது?

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்: இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டம், தொண்டியில் புதிய அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பணிமனை அமைப்பதற்கான கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

இராம.கரு மாணிக்கம்: அந்தப் பணி செய்து கொடுக்கப்படும் என்றால், எவ்வளவு விரைவில் செய்து கொடுக்கப்படும்?

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் : அதற்கான இடம் தேர்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டு, மாவட்ட ஆட்சியர் தற்போது அளித்துள்ளார்கள். தற்போது, நிலத்தின் மதிப்பைக் கேட்டு, துறையிலிருந்து மாவட்ட ஆட்சியரிடம் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலை, அனைவரும் அறிந்ததே. எனவே நிதிநிலை சீராகின்ற பட்சத்தில் அதைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், புதிய பணிமனை அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்தும் நிதியை அளிப்பதற்குத் தாங்களும் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராம.கரு மாணிக்கம்: சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதியை அளிப்பதற்கும் தயாராக இருக்கிறேன். அதேநேரத்

தில், போக்குவரத்துத் துறையின் சார்பிலும், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். அது மட்டுமல்ல, எவ்வளவு விரைந்து அந்த போக்குவரத்துப் பணிமனையை அமைத்துத் தருவீர்கள்?

எங்கள் பகுதியில் அதிக அளவிலான பழைய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஏற்கெனவே இருக்கின்ற பழைய பேருந்துகளை, புதிய பேருந்துகளாக மாற்றித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்றும் அறிய விரும்புகிறேன். அதேபோன்று, அந்தப் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைந்த பிறகு, அப்பகுதிக்குத் தேவையான புதிய வழித்தடங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

பெண்களுக்கு பேருந்துகளில் இலவச விடியல் பயணம் அளித்தது போல், ஆண்களுக்கும் பேருந்துகளில் விடியல் பயணம் கொடுப்பதற்கு அரசு முன் வருமா?

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்: அந்தப் பகுதியில் மாற்றுப் பணிமனை வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தொண்டி ECR சாலையில் அமைந்துள்ள பின்தங்கியில் அமைந்திருக்கின்ற மிகவும் பகுதியாக உள்ளது. இருந்தாலும், அரசின் நிதிநிலை மற்றும் போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். நிதி அமைச்சர் அவர்களின் அறிவுரையைப் பெற்று, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பழைய பேருந்துகளை மாற்ற வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு அமைந்ததிலிருந்து இதுவரையில, 3,400 பழைய பேருந்துகளை மாற்றி, புதிய பேருந்துகள் அந்த வழித்தடங்களில் இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. மாதந்தோறும், பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. வாரந்தோறும் புதிய பேருந்துகள் வருகைக் கேற்ப, ஆங்காங்கு துவக்கி வைக்கப்படுகின்ற பணிகள் நடைபெற்றுவருகின்றன. அந்தவகையில், உங்கள் தொகுதியின் பழைய பேருந்துகளும் மாற்றியமைக்கப்படும் என்ற உறுதியை அளிக்கிறேன்.

மேலும், ஆண்களின் இலவசப் பயணத்தைப் பொறுத்தவரையில், உறுப்பினரது ஆர்வம், வரவேற்கத்தக்கது. இருந்தாலும், இதுவரையில், ஒடுக்கப்பட்டவர்களாக இருக்கின்ற பெண்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் தரவேண்டும் என்கிறவகையில்தான், முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கு விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டங்களைத் தந்து, பெண்கள் வாழ்வில் சமநிலையில் வருவதற்கு தந்தை பெரியார் அவர்கள் காட்டிய பாதையில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

ரூ. 6.7 கோடி மதிப்பில்

கரூரில் குடிநீர் திட்டப் பணிகள் - முடிவுற்ற பணிகள்!

அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்!

கரூர், ஏப்.13 -

கரூரில் 6.7 கோடி மதிப்பிலான குடிநீர் திட்ட பணிகளை தொடங்கியும், முடிவுற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி திறந்து வைத்தார்.

கரூர் மாநகராட்சி பகுதி மற்றும் ஆண்டாங் கோவில் பகுதிகளில் புதிய குடிநீர் திட்ட பணிகளை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். முடிவற்ற பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அப்போது அமைச்சர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது: -

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் வளர்ச்சித் திட்ட பணிகளையும் நிதியையும் வழங்கி வருகிறார்கள். அந்த வகையில் கரூர் மாவட்டத்தில் குறிப்பாக கரூர் மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் திட்டம், தார் சாலை, வடிகால் வசதி திட்டங்களை வழங்கி வருகிறார்கள். கரூர் மாநகராட்சி பகுதியில் ரூ. 92 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் திட்ட பணிகள் நடப்பு சட்ட மன்ற பேரவை தொடரில் அறிவிக்கப்பட்டுள்ளது. பணிகளை தொடங்க நிர்வாகம் தயாராகி வருகிறது.

கரூர் மாநகராட்சியில் மொத்தம் 579 கோடி ரூபாய் மதிப்பில் வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்துவது ரூ. 113 கோடி மதிப்பில் குடிநீர் திட்ட பணிகளை மேற்கொள்வது போன்ற பணிகள் கள் நடைபெற்று வருகிறது. தற்போது குடிநீர் மேம்பாட்டு பணிகளுக்காக ரூ.5 கோடி மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி பகுதிகளில் 7 முதல் 9நாட்கள் வரை இடைவெளியில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இப்பணிகள் முடிவடையும் போது மூன்று நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வினியோகம் செய்யப்படும்.

கரூர் புதிய பேருந்து நிலையம் பணிகள் 50% நிறைவு பெற்றுள்ளது. தற்போது நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 3முதல் நான்கு மாதத்திற்குள் பணிகள் நிறைவடையும். கால தாமதத்திற்கு யார் காரணம் என்பது அனைவருக்கும் தெரியும். அவர்கள் எதையும் செய்வதில்லை அடுத்தவர்கள் செய்வதையும் செய்ய விடாமல் தடுக்கின்ற வேலையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஒவ்வொருமுறையும் நீதிமன்றம் சென்று உத்தரவு பெற்று நாங்கள் பணிகளை தொடர்ந்து வருகிறோம். குறுகிய மனப்பான்மையுடன் வளர்ச்சி பணிகளை தடுக்கின்றனர்.

திருவள்ளூர் மைதானத்தில் போட்டி தேர்வுக்கு தயாராகி வரும் மாணவர்களின் வசதிக்காக புதிய நூலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. அதற்கும் தடை ஏற்படுத்தினார்கள். தற்போது அந்தப் பணிகளும் தொடங்க இருக்கிறது.

அமராவதி ஆற்றில் வெள்ளம் வரும்போது உபரி நீரை பயன்படுத்தும் வகையில் ரூ. 10 கோடி நிதி அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கும்.

நெரூர் மற்றும் மருதூர் பகுதியில் காவிரி ஆற்றில் தடுப்பணைகள் கட்டும் திட்டம் நடைபெற இருக்கிறது. கோயம்பள்ளி மேலப் பாளையம் பாலம் இணைப் புச்சாலைக்கு என தனியாக பணிகள் மேற்கொள்ளப் பட்டு விரைவில் பாலம் திறந்து வைக்கப்படும். இவ்வாறு அமைச்சர் கூறினார். கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல், கிருஷ்ண ராயபுரம் எம்எல்ஏ க. சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர்கள் எஸ்பி கனகராஜ், கோல்ட் ஸ்பாட் ராஜா, சக்திவேல், மாநகராட்சி ஆணையர் சுதா ஆகியோர் உடன் இருந்தனர்.

தி.மு.க. வர்த்தகர் அணி

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. வர்த்தகர் அணியின் திண்டுக்கல் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்

திண்டுக்கல் மாநகரம்

தலைவர் - பெ. சிவக்குமார், 172, ஆர்.எம். காலனி, வடக்கு பகுதி, 3வது குறுக்குத் தெரு, திண்டுக்கல் மாவட்டம்.

துணைத் தலைவர் - ரெ. முருகன், 17, நரிப்பாறை, அங்குவிலாஸ், திண்டுக்கல்.

அமைப்பாளர் - மு. தாஜ்தீன், 10/1, எஸ்.பி. நகர், வத்தலக்குண்டு ரோடு, பாறைப்பட்டி, பேகம்பூர், திண்டுக்கல்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே.எம். ஆறுமுகம், 4/பி, ரெட்டியார் காம்பவுண்டு, கிழக்கு ராமநாதபுரம், திண்டுக்கல் - 1. 2) மு. அப்துல் காதர், எண். 18, ஆடிகாட்டாளம், காம்பவுண்ட், பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் - 624002. 3) சூ. ஆரோக்கியரவி, 49/டி/3, கிழக்கு ஆரோக்கியமாதா தெரு, திண்டுக்கல் - 624003 4) கி. நந்தகோபால், 3/5, எழில் நகர், திண்டுக்கல் - 5, 5) ரெ. வெங்கடேசன், 90/டி, சாந்தி இல்லம், கிழக்கு கோவிந்தாபுரம், திண்டுக்கல்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11-04-2025.

காசி முத்துமாணிக்கம்
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி